# <u>பத்மனாபபுரம் நகராட்சி</u>

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் 2018–ம் வருடம் மே மாதம் 11–ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரங்கள் பின்வருமாறு.

## <u>பொருட்கள்</u>

1)பத்மனாபபுரம் நகராட்சிப் பகுதியில் நகர புல எண். B7-29 அரசு புறம் போக்கு பாதை என்று ‘அ’ பதிவேடுகளில் உள்ளது. இந்த இடத்தில் கூட்டுறவு பண்டக சாலை கட்டிடம் அமைந்துள்ளது. இந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தை கல்குளம் கூட்டுறவு பண்டக சாலை பெயரில் மாற்றம் செய்ய நகர் மன்றத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு கல்குளம், வட்டாட்சியர் அவர்கள் தனது 21–12–2017–ம் தேதிய ந.க.ஆ3/4514/2017–ம் எண்ணுள்ள கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்கள். இவ்வலுவலக நகர் சார் ஆய்வாளர் 25–01–2018–ம் தேதிய குறிப்பில் மேற்படி கட்டிடம் அமைந்துள்ள இடத்தை கூட்டுறவு பண்டக சாலை பெயருக்கு நில உரிமை மாற்றம் செய்யலாம் என்று அறிக்கை செய்துள்ளார்கள். எனவே நில உரிமை மாற்றம் செய்வதற்கு தடையின்மை சான்று வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>மன்றத் தீர்மானம் எண். 1246, நாள் 11–05–2018.</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

2)இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 மற்றும் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016–ன் படி அபராதக் கட்டணங்கள் மற்றும் சேவைக் கட்டணங்களுடன் செயல்முறைப்படுத்தப்பட்டு கன்னியாகுமரி மாவட்ட அரசிதழில் சிறப்பின வெளியீடாக 02–03–2018 அன்று வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் 02–03–2018 முதல் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 மற்றும் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016–ஐ இந்நகராட்சியில் நடைமுறைப்படுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 320/2018/அ2)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1247</u>**

அனுமதிக்கப்பட்டது.

3)இந்நகராட்சிக்கு சொந்தமான புல் வெட்டும் இயந்திரத்தில் பழுது பணிகள் மேற்கொண்டமைக்கான செலவு தொகை ரூ.2090/– திரு. எஸ். ஜோணி, துப்புரவு பணி மேற்பார்வையாளரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே புல்வெட்டும் இயந்திரத்தில் கீழ்க்காணும் பழுது பணிகள் மேற்கொண்டதற்கும், அதற்காகும் செலவுத் தொகை ரூ.2090/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து திரு. எஸ். ஜோணி துப்புரவு பணி மேற்பார்வையாளருக்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>பழுது வேலைகள் விபரம்</u>**

| | | |
|---|---|---|
| 1 | 17211Z 110000(Element, Air clearer | 1 No |
| 2 | Not flange 10mm (9030IVKGA01 | 1 No |
| 3 | Cover Bolt (72623VK9A01) | 1 No |
| 4 | Blade (1 x 850)(725 11VK9A01) | 1 No |
| 5 | Holder A. Blade 41125VK 9A01 | 1 No |
| 6 | Holder A, Blade 41125 VK 9A01 | 1 No |
| 7 | NT 001 (TRIMMER HEAD) | 1 No |

**<u>மன்றத் தீர்மானம் எண். 1248</u>**

அனுமதிக்கப்பட்டது.

4) இந்நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் வாகன எண். TN 74D 4151, TN 74Z 2536, TN 75P 9346 மற்றும் TN75Z 9748 ஆகிய நான்கு வாகனங்களுக்கு 01–04–2018 முதல் 31–03–2019 வரை உள்ள காலங்களுக்கு சாலை வரியாக ரூ.14113/–செலுத்த தெரிவித்து ஓட்டுநர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். எனவே மேற்படி வாகனங்களுக்கு 2018–2019–ம் ஆண்டுக்கு சாலை வரி ரூ.14113/–ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 631/2018/அ2)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1249</u>**

அனுமதிக்கப்பட்டது.

5)திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் 04–01–2018–ம் தேதிய ந.க.எண்.2920/2014/அ4 எண்ணுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும், இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரின் 08–01–2018–ம் தேதிய அறிக்கையின் படியும், இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பொது மக்களுக்கு மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்திட மல்டிகலர் ஸ்டிக்கர் 5000/– எண்ணம் அச்சிட்டு வாங்குவதற்கும், அதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.90,000/–க்கும் மேற்படி செலவு தொகையினை SBM-IEC Activity என்ற தலைப்பில் வரப்பெற்ற நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு அச்சகத்தில் இருந்து விலைப்புள்ளிகள் பெற்று பொருட்கள் வாங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(23/2018/அ2)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1250</u>**

அனுமதிக்கப்பட்டது.

6) இந்நகராட்சிப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016–ன் படி மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை பற்றிய விழிப்புணர்வு ஏற்படத்திட மல்டிகலர் ஸ்டிக்கர் 5000/– எண்ணம் வாங்குவதற்கு 14–02–2018 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் பின்வருமாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | எண்ணம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | அரும்பாக்கம் ஸ்டேஷனரி பிரிண்டிங் (ம) கூட்டுறவு சங்கம் . | 10000 | 177000 |
| 2. | வேலூார் ஸ்டேஷனரி பிரிண்டிங் கூட்டுறவு சங்கம். | 10000 | 178000 |
| 3. | போரூர் ஸ்டேஷனரி பிரிண்டிங் (ம) கூட்டுறவு பங்கம் | 10000 | 179000 |

மேற்படி மூன்று விலைப்புள்ளிகளில் வ.எண்.1–ல் கண்ட நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை எற்று 5000 எண்ணம் மல்டி கலர் ஸ்டிக்கர்மட்டும் அரும்பாக்கம் ஸ்டேஷனரி பிரிண்டிங் (ம) கூட்டுறவு அச்சகத்தில் ,இருந்து வாங்குவதற்கு சப்ளை உத்திரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>மன்றத் தீர்மானம் எண். 1251</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

7) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு கொசுக்களால் பரவுவதை தடுக்கவும் மற்றும் டெங்கு நோய்கள் வராமல் தடுக்கும் பொருட்டு வீடு வீடாக சென்று கண்காணிக்கவும், கொசுக்களின் வாழ்வாதாரங்களை அழிக்கவும் 8 தினக் கூலி பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் சுகாதார ஆய்வரின் குறிப்பின்படி அவர்களை 01–02–2018 முதல் மேலும் 89 நாட்களுக்கு பணியமர்த்துவதற்கு அனுமதிக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் எ2/194/2016 நாள் 11–02–2018–ன் படி நிர்ணயம் செய்யப்பட்ட தொகை நாளொன்றுக்கு ரூ.250/– வீதம் தினக்கூலியாக வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.1,78,000/– க்கும் மேற்படி தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண்.3827/2015/அ2)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1252</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

8) நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை அலுவலகங்களில் உள்ள முக்கிய பகுதிகளில் கண்காணிப்பு கேமராக்கள் (CCTV)பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது. அதன்படியும் இந்நகர் மன்றத்தின் 30–01–2018–ம் தேதிய 1179–வது எண் தீர்மானத்தின் படியும் இந்நகராட்சிக்குட்பட்ட முக்கிய பகுதிகளான டவுண்ஹால் ,பேருந்து நிலையம் மற்றும் நகராட்சி அலுவலகம் ஆகிய பகுதிகளில் கண்காணிப்பு கேமரா பொருத்தும் பணியை ரூ.3,00,000 மதிப்பீட்டில் செய்வதற்கு 06–03–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப் பெற்றது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு சதவிகிதம் | |
|---|---|---|---|
| | | குறைவு | அதிகம் |
| 1. | M.S. Enterprises<br>25B,இந்திராகாந்தி நகர்,<br>சென்னை – 87 | –0.43 | – |
| 2. | S.R. Enterprises<br>45 தெற்கு சிவன் கோவில் தெரு<br>வடபழனி<br>சென்னை | – | +11.40 |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதில் இரண்டு நிறுவனங்களுமே SSI Unit சான்றிதழ் நடப்பு ஆண்டில் 28–03–2018 அன்று இணைக்கப்படவில்லையாததால் வைப்புத் தொகை செலுத்த கடிதம் அனுப்பப்பட்டதில் M.S. Enterprises நிறுவனம் மட்டுமே வைப்புத் தொகை செலுத்தியுள்ளார். மற்றும் மதிப்பீட்டினை விட 0.43 சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதால் M.S. Enterprises

நிறுவனத்திற்கு மேற்படி கண்காணிப்பு கேமரா பொருத்தும் பணிகள் மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.1984/2017/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1253</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

9) பத்மனாபபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் ஒகி புயல் பாதிப்பால் குடிநீர் குழாய்கள் மற்றும் பிரதான குழாய்கள் மிகவும் பழுதடைந்ததால் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படாமல் உள்ளது. மேற்படி குடிநீர் விநியோகம் சீராக இல்லாமல் பொதுமக்கள் மிகவும் சிரமப்படும் நிலை ஏற்படுகிறது. மேற்படி பொது மக்கள் நலன் கருதி ஒகிபுயலால் பாதிக்கப்பட்ட குடிநீர் பகிர்மான குழாய்கள் பழுதாகி உள்ளதால் அவைகளை சீரமைப்பு செய்யும் வேலைகளை மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ. 1.70 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை ரூ.1,70,000/– மதிப்பீட்டில் செய்வதற்கும் மேற்படி பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி செய்யவும், அதற்கான செலவினத் தொகையை ஒகி புயல் நிவாரண நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 538/2018/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1254</u>**

அனுமதிக்கப்பட்டது.

10) ஒகி புயலால் இந்நகராட்சிக்கு சொந்தமான பத்மனாபபுரம் பூங்காவிலுள்ள மரம் சாய்ந்து அருகில் உள்ள அங்கன்வாடி சுற்றுச் சுவர் மீது விழுந்ததினால், சுற்றுச் சுவர் மிகவும் பழுதடைந்தும், மின்சார வயர்கள் அனைத்தும் பழுதடைந்து தொங்கிய நிலையில் அங்கன்வாடியில் உள்ள சிறு குழந்தைகளுக்கு மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது. எனவே சுற்றுச் சுவர் பழுது பார்க்கும் பணியையும், மின்சார வயர்கள் புதியது வாங்கி பொருத்தி மின் இணைப்பு பெறுவதற்கும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.20,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேலும் மேற்படி பணியை ஒகி புயலால் நிவாரண நிதியில் இருந்து உடனடியாக செய்து முடிக்க வேண்டியிருப்பதால், மேற்படி பணியை இந்நகராட்சியில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. ஜி.சுந்தரராஜ் என்பவருக்கு மதிப்பீட்டு ரேட்டிற்கு ஒப்படைப்பு செய்து பணியை செய்யவும் அவசர அவசியம் கருதி, பணியைச் செய்ய வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>மன்றத் தீர்மானம் எண். 1255</u>**

அனுமதிக்கப்பட்டது.

11) ஒகி புயலால் இந்நகராட்சியில் இருந்த ஜெனரேட்டர் மற்றும் குடிநீர் தொட்டி மிகவும் பழுதடைந்துள்ளதால் ஜெனரேட்டரை பழுது நீக்கம் செய்யவும் குடிநீர் தொட்டியினை சீரமைத்து அவைகளை சுற்றி பேவர் பிளாக் அமைக்கும் பணிகளை மேற்கொள்ளவும் மதிப்பீடு ரூ.80000/–தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டிற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது. மேலும் வேலைக்கான செலவினத் தொகையை ஒகி புயல் நிவாரண நிதியின் கீழ் மேற்கொள்ளவும் , அவசர அவசியம் கருதி மேற்படி பணியை செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். சி1/538/2018)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1256</u>**

அனுமதிக்கப்பட்டது.

12)ஒகி புயல் நிவாரண நிதியின் கீழ் (SDRF)பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்கு பராமரிப்பு பணிக்காக கீழ்க்கண்ட தெருவிளக்கு உதிரிபாகங்கள் விநியோகம் செய்யும் பணியை ரூ.1,75,000/–மதிப்பீட்டில் செய்ய 20–04–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனதாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப் பெற்றது.

**<u>தெருவிளக்கு உதிரி பாகங்களின் விபரம்.</u>**

Supply and Delivery of 30W LED street light fitting with allied assesories for street light Maintenance in Padmanabhapuram.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | Southern Solid Waste Management Service Mulagumoodu | மதிப்பீட்டினை விட –24.85% குறைவு |
| 2. | T.R. Traders Thazhakudi | மதிப்பீட்டினை விட –35.99% அதிகம். |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 24.85 சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Southern Solid Waste Management Service, Mulagumoodu நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் மதிப்பீட்டினை விட மிகவும் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதால் மேற்படி பணிக்கான 10% கூடுதல் வைப்புத் தொகை ரூ.17,500/–செலுத்திய பின் விநியோக உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 538/2018/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1257</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

13) ஒகிபுயல் மாநில பேரிடர் மேலாண்மை நிதி (SDRF) யின் கீழ் பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்கு பராமரிப்பு பணிக்காக உயர் கோபுர விளக்கிற்கு தேவையான உதிரிபாகங்கள் விநியோகம் செய்யும் பணியை ரூ.3,00,000/– மதிப்பீட்டில் வழங்குவதற்கு 20–04–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | TR Traders Thazhakudi | மதிப்பீட்டினை விட –30.66% குறைவு |
| 2. | Southern Solid Waste Management service Muzhagumoodu | மதிப்பீட்டினை விட –24.90% குறைவு |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 30.66 குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள TR Traders தாழக்குடி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும், மதிப்பீட்டினை விட மிகக் குறைவாக உள்ளதால் 10% கூடுதல் வைப்புத் தொகை ரூ.30,000/– செலுத்திய பிறகு விநியோக உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 538/2018/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1258</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

14)ஒகிபுயல் மாநில பேரிடர் மேலாண்மை நிதி (SDRF) யின் கீழ் பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்கு பராமரிப்பு பணிக்காக தெருவிளக்கு உதிரி பாகங்கள் விநியோகம் செய்யும் பணியை ரூ.1,00,000/– மதிப்பீட்டில் செய்ய 20–04–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | Southern Solid Waste Management Service, Muzhagumoodu | மதிப்பீட்டினை விட –24.43% குறைவு |
| 2. | TR Traders Thazhakudi | மதிப்பீட்டினை விட –28.60% குறைவு |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 28.60% மிகவும் குறைவாக கொடுத்துள்ள M/s. T.R. Traders தாழக்குடி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும், மதிப்பீட்டினை விட மிகக் குறைவாக உள்ளதால் 10% கூடுதல் வைப்புத் தொகை ரூ.10,000/– செலுத்திய பின் விநியோக உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
(ந.க.எண். 538/2018/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1259</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

15) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் 07–03–2018–ம் தேதி நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் பொது மக்களால் பயன்படுத்த இயலாத தேவையற்ற உபயோகமற்ற பழைய சமுதாய கழிப்பிடத்தை இடித்து விட்டு அவ்விடத்தில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையம் (Micro Compost centre) அமைக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. அதன்படி பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட இலுப்ப கோணம் பகுதியில் பயன்படுத்தப்படாத உபயோகமற்ற மற்றும் தேவையற்ற பழைய சமுதாய கழிப்பிடத்தை அகற்றித் தருமாறு பொது மக்கள் கேட்டுக் கொண்டதாக SBM திட்ட பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள். எனவே சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்திரவு படியும், பொது மக்களின் கோரிக்கையின் படியும் இலுப்ப கோணம் பகுதியில் உள்ள பயன்பாடற்ற கழிப்பிடத்தை இடித்து விட்டு அவ்விடத்தில் சிறிய அளவிலான உரக்கிடங்கு அமைக்கவும் மற்றும் தற்போதைய மருந்துக் கோட்டை Compost Yard-ல் Mechinaries Shed பகுதியில் மற்றொரு உரக்கிடங்கு அமைக்கவும், கீழ்க்காணும் விவரப்படி ரூ.20,00,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

**<u>பணிகள் விபரம்</u>**

| வ.எண். | வேலையின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை<br>ரூ. |
|---|---|---|
| 1. | இலுப்பகோணம் பகுதியில் Micro Compost Centre அமைக்கும் பணி. | 14.00 இலட்சம் |
| 2. | மருந்துக்கோட்டை பகுதியில் Micro Compost Centre அமைக்கும் பணி. | 6.00 இலட்சம் |
| | மொத்தம் | 20.00 இலட்சம் |

மேற்காணும் இரண்டு வேலைகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள இந்நகராட்சி பொது நிதியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நிதி வழங்க கேட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி வழியாக பிரேரணை அனுப்பவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண். 455/2018/இ1)

**<u>மன்றத் தீர்மான எண்.1260</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

16)இந்நகராட்சி வருவாய் ஆய்வரின் அறிக்கையின்படி பத்மனாபபுரம் நகராட்சிக்கு சொந்தமான தக்கலை பேட்டை சந்தை கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் மீன் சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் இலாகா மூலம் வசூல் செய்யப்பட்டு வரப்படுகிறது. எனவே இலாகா மூலம் வசூல் செய்யப்பட்டு வரும் இவ்வலுவலக பணியாளர்களின் நலன் கருதியும், தக்கலை பேட்டை சந்தை மற்றும் மீன் சந்தையில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளின் நலன் கருதியும் அவ்விருவிடங்களில் தண்ணீர் வசதி மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.1.75 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதியும், மேற்படி பணியை ஒப்பந்தப்புள்ளி கோரி செய்யவும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 587/2018/இ1)

**மன்றத் தீர்மானம் எண். 1261**

அனுமதிக்கப்பட்டது.

17) 2018–19–ம் ஆண்டுக்கு இந்நகராட்சிக்கு தேவையான எழுது பொருட்கள், படிவங்கள், பாரங்கள், புத்தகங்கள் மற்றும் டோனர்கள் கூட்டுறவு அச்சகத்தில் இருந்து வாங்கிக் கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 5,00,000/–க்கும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது

ஆ)கோவில்பட்டி, சிதம்பரனார் மாவட்ட கூட்டுறவு அச்சக நிறுவனத்தார் தனது 02–05–2018–ம் தேதிய கடிதத்தில் 2017–18–ம் ஆண்டுக்கு சப்ளை செய்ய 16–02–2018–ம் தேதிய ஒப்பந்தப்புள்ளியில் தெரிவிக்கப்பட்ட விலை விகிதத்தில் 2018–19–ம் ஆண்டுக்கும் எழுது பொருட்கள் விநியோகம் செய்ய சம்மதம் தெரிவித்து கடிதம் அனுப்பியுள்ளனர். எனவே 2017–18–ம் ஆண்டுக்கு சப்ளை செய்த விலை விகிதத்தில் 2018–19–ம் ஆண்டுக்கும் கோவில் பட்டி, சிதம்பரனார் மாவட்ட கூட்டுறவு அச்சகத்தில் இருந்து எழுது பொருட்கள் வாங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. .

இ) அவசர அவசியம் கருதி, கீழ்க்கண்ட விவரப்படி எழுது பொருட்கள் வாங்குவதற்கு சப்ளை உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | எழுது பொருட்கள் விபரம் | எண்ணிக்கை ரூ. |
|---|---|---|
| 1. | 80A டோனர் | 10 எண்ணம் |
| 2. | A4 பேப்பர் | 50 ரீம் (5 பாக்ஸ்) |
| 3. | Legal பேப்பர் | 30 ரீம் (3 பாக்ஸ்) |

| | | |
|---|---|---|
| 4 | அம்மா உணவகம் இட்லி சாம்பார் புத்தகம் (1 புத்தகம் = 1200 டோக்கன்) | 300 |

(ந.க.எண். 25/2018/இ2)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1262</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

18) ஒகி புயல் நிவாரண நிதியின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய்களில் பழுது பார்ப்பு பணிகள் மேற்கொள்ளும் பணியை ரூ.1,70,000/– மதிப்பீட்டில் செய்வதற்கு 26–04–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | டெண்டர் விகிதம் |
|---|---|---|
| 1. | திரு. சி. சந்திரசேகர் | மதிப்பீட்டினை விட 1.06% குறைவு. |
| 2. | திரு. ஜி. சுந்தர்ராஜ் | மதிப்பீட்டினை விட 25.47% அதிகம். |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 1.06% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. சி. சந்திரசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு பணிகளை மேற்கொள்ள உத்திரவு வழங்கப்பட்டதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.538/2018/இ1.)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1263</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

19) ஒகி புயல் நிவாரண நிதியின் கீழ் இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஜெனரேட்டர் பழுது பார்க்கும் வேலை (ம) குடிநீர் தொட்டியினை சீரமைத்து அவைகளை சுற்றி பேவர் பிளாக் பணிகள் மேற்கொள்ளும் பணியை ரூ.80,000/– மதிப்பீட்டில் செய்வதற்கு 26–04–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தகாரர் விலை விகிதம் |
|---|---|---|
| 1. | ஜி. சுந்தர்ராஜ் | மதிப்பீட்டினைவிட 0.01% குறைவு |
| 2. | சி. சந்திரசேகர் | மதிப்பீட்டினைவிட 0.44% அதிகம். |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள (0.01 % குறைவு) திரு. ஜி. சுந்தர்ராஜ் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மேற்கண்ட பணியை மேற்கொள்ள வேலை உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 538/2018/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1264</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

20)ஒகி புயல் நிவாரண நிதியின் கீழ் பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட மேலாங்கோடு சாலைகளில் சாலை சீரமைப்பு பணிகளை மேற்கொள்ளும் வேலையை ரூ. 90,000/– மதிப்பீட்டில் செய்வதற்கு 20–04–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|
| திரு. ஜி. சுந்தர்ராஜ் | மதிப்பீட்டினை விட 0.02 சதவீதம் குறைவு |
| திரு. சி. ஸ்டாலின் | மதிப்பீட்டினை விட 0.03 சதவீதம் குறைவு. |

மேலும் மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.03 சதவீதம் மிகவும் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. சி. ஸ்டாலின் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு பணியைச் செய்ய வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 538/2018/சி1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1265</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

21) ஒகிபுயல் நிவாரண நிதியின் கீழ் பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட குமாரகோவில் சாலை பெருமாள்கோவில் சாலை அரண்மனை முகப்பு செட்டியார் தெரு செட்டியார் தெரு நெடுஞ்சாலை மற்றும் சந்தைவெளி சாலை ஆகிய சாலைகளில் சாலை சீரமைப்பு பணிகளை மேற்கொள்ளும் பணியை ரூ.190000/– மதிப்பீட்டில் செய்வதற்கு 20–04–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|
| திரு. ஜி. சுந்தர்ராஜ் | மதிப்பீட்டினை விட 0.02 சதவீதம் குறைவு |
| திரு. சி. ஸ்டாலின் | மதிப்பீட்டினை விட 0.03 சதவீதம் குறைவு. |

மேலும் மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.03 சதவீதம் மிகவும் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. சி. ஸ்டாலின் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு பணியைச் செய்ய வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 538/2018/சி1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1266</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

22) இந்நகராட்சிக்குச் சொந்தமான குமாரகோவில் கட்டண கழிவறையில் கட்டணம் வசூல் செய்யும் அனுபவ உரிமைக்கு வேண்டி 11–04–2018 அன்று நடைபெற்ற மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண். | பெயர் (ம) விபரம் | ஏலகேள்வி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு. டி. ஜாண்றோஸ்<br>13/32–36 இராமன்பறம்பு<br>தக்கலை | 8200/– | 15000/– |
| 2. | திரு. தங்கப்பன்<br>1பி மேலத்தெரு<br>குமாரகோவில் | – | 7101/– |
| 3. | திரு. எஸ். ஸ்ரீகண்டன்<br>69/67 கீழத்தெரு<br>குமாரகோவில் | – | 6500/– |

மேற்படி வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண். 1–ல் காணும் திரு. டி. ஜாண்றோஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ரூ.15000/– கொடுத்து உள்ளார். கடந்த ஆண்டு குத்தகை தொகையை விடவும் கடந்த மூன்றாண்டு சராசரி தொகையை விடவும் கூடுதலாக உள்ளது. எனவே திரு. டி. ஜான்றோஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ரூ.15000/–ஐ ஏற்று 2018–2019–ம் ஆண்டு முதல் 2020–21 முடிய 3 ஆண்டுகளுக்கு குத்தகை அனுபவ உரிமையை ஒப்படைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.1981/2017/அ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1267</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

23) இந்நகராட்சியின் 2017–2018–ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை தயார் செய்து நகர் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 1100/2017/சி1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1268</u>**

பார்வையிட்டு அனுமதி வழங்கப்பட்டது.

24) இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட கீழ்க்காணும் இடங்களில் சுமார் 15 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட பொதுக்கழிப்பிடம் மிகவும் மோசமான மற்றும் ஆபத்தான நிலையில் உள்ளது.

| வ.எண். | கழிப்பிடம் அமைந்துள்ள இடங்கள் |
|---|---|
| 1. | இலுப்ப கோணம் பகுதியில் அமைந்துள்ள கழிப்பிடம். |
| 2. | வாழவிளை கோட்டை சுவர் அருகாமையில் அமைந்துள்ள கழிப்பிடம். |
| 3. | ஆர்.சி. தெருவில் சிறுகடை பகுதியில் ஆற்றின் கரை பக்கம் அமைந்துள்ள பழைய கழிப்பிடம். |

மேலும் மேற்காணும் மூன்று கழிப்பிடங்கள் பொது மக்களுக்கு எவ்வித பயனும் இன்றியும் உபயோகப்படுத்த இயலாத நிலையிலும் உள்ளதால், பயன்பாட்டில் இல்லாத மேற்படி கழிப்பிடங்களை இடித்து தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பணிபுரியும் கணக்கெடுப்பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர் மேற்படி கழிப்பிடங்கள் அமைந்துள்ள பகுதிகளில் உள்ள ஒவ்வொரு வீடுதோறும் ஆய்வு மேற்கொண்டதில் அனைத்து வீடுகளிலும் கழிப்பறை வசதிகள் உள்ளதால் அவ்விடங்களில் பொதுக் கழிப்பிடங்கள் தேவையில்லை என 03–05–2018 அன்று அறிக்கை செய்துள்ளார்கள்.

இவ்வலுவலக பொதுப்பணி பார்வையாளர் கழிப்பிடங்களை நேரில் பார்வையிட்டு கழிப்பிடங்கள் பயன்பாட்டில் இல்லாமல் உள்ளதென தனது 25–04–2018–ம் தேதிய அறிக்கையில் தெரிவித்து பொது மக்கள் மேற்படி கழிப்பிடங்களை இடிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்ததாகவும் தெரிவித்துள்ளார். மேலும் 09–05–2018–ம் தேதிய குறிப்பில் மேற்படி கழிப்பிடக் கட்டிடங்கள் கட்டப்பட்டு 15 வருடங்களுக்கு மேல் ஆவதால் கட்டிடங்களின் ஸ்தரத் தன்மை (Stability )குறைந்து உள்ளதால் இடிந்த நிலையில் மிகவும் மோசமாக உள்ளதென தெரிவித்துள்ளார்.

இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளர் மேற்படி கழிப்பிடங்களை பார்வையிட்டு, மேற்படி சமுதாய கழிப்பிடங்களில் கடந்த சில ஆண்டுகளாக மின் வசதிகள், தண்ணீர் வசதிகள் ஏதும் இல்லாமல் பொது மக்கள் எவரும் பயன்படுத்த முடியாத நிலையிலும் பொது மக்களுக்கு மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது எனவும், பயன்பாடற்ற மேற்படி சமுதாய கழிப்பிடங்களை இடித்து அப்புறப்படுத்தலாம் எனவும் 08–05–2018–ம் தேதிய அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இவ்வலுவலக நகராட்சி பொறியாளர் 07–03–2018 அன்று தூய்மை இந்தியா திட்டம் குறித்து சென்னையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்கள் நகராட்சிக்குட்பட்ட இடங்களில் உள்ள பயன்பாடற்ற கழிப்பிடங்களை இடித்து அகற்றுமாறு அறிவுறுத்தப்பட்டதால் மேற்காணும் 3 இடங்களில் சிதலடைந்த சமுதாய கழிப்பிடங்களை இடித்து அப்புறப்படுத்தலாம் என தனது 25–04–2018–ம் தேதிய அறிக்கையில் தெரிவித்து அவைகளை இடித்து அப்புறப்படுத்தும் பணியை மேற்கொள்ள ரூ.2,00,000/–க்கு மதிப்பீடு தயார் செய்தும் சமர்ப்பித்துள்ளார்.

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களால் 07–03–2018–ம் தேதி நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் தெரிவித்தவாறு 28–03–2018–ம் தேதிய ஆய்வுக் கூட்ட அறிக்கையில் பக்கம் எண்.19–ல் பயன்பாடற்ற மற்றும் உபயோகத்தில் இல்லாத கழிப்பிடங்களை இடித்து அப்புறப்படுத்துவதற்கு நகர் மன்றத்தில் ஒப்புதல் பெற்றும் , நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஒப்புதல் பெற்றும் இடித்து அகற்றி விட்டு மேற்படி காலி இடங்களை Micro Compost centre, Park ஆகியவைகளாக பயன்படுத்தலாம் எனவும் உத்திரவிடப்பட்டுள்ளது.

எனவே பொது மக்களின் கோரிக்கையின் படியும், தூய்மை இந்தியா இயக்கக பணியாளர்களின் அறிக்கையின் படியும், இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளர், பொது பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோர்களின் அறிக்கையின்படியும், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டங்களில் தெரிவிக்கப்பட்ட படியும் பயன்பாடற்ற மற்றும் ஆபத்தான நிலையில் உள்ள மேற்காணும் 3 சமுதாய கழிப்பிடங்களை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் அனுமதி பெற்று இடித்து அப்புறப்படுத்துவதற்கும், அதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2,00,000/–க்கும் மன்றத்தின் அனுமதிக்கு

வைக்கப்படுகிறது. மேலும் மேற்படி பணியை ஒப்பந்தப்புள்ளி கோரி செய்வதற்கும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். இ1/794/2018)

**<u>நகர் மன்றத் தீர்மான எண்.1269</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

25) குடிநீர் விநியோக நிதியின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட நான்கு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் Liquid Cholorination அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. மேற்படி குடிநீர் தொட்டிகளில் திரவ வடிவ குளோரினேஷன் ரூ. 95,000/– மதிப்பீட்டில் சப்ளை செய்வதற்கு 18–04–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | டெண்டர் விகிதம் மதிப்பீட்டினை விட | |
|---|---|---|---|
| | | குறைவு | அதிகம் |
| 1. | Excellent Choloro Systems<br>98, Thiruvalluvar Nagar,<br>Sankarankovil. | 0.00% | – |
| 2. | SreeSathya Dyes and Chemicals<br>Aandipatti. | – | 5.56% |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Excellent Choloro Systems நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று விநியோக உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 108/2018/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1270</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

26) குடிநீர் விநியோக நிதியின் கீழ் பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட இரணியல் பகுதியில் எஸ்.யு.எஸ் திருமண மண்டபம் அருகில் ஆழ்குழாய் கிணறு அமைத்து சிறுமின் விசை திட்டம் அமைக்கும் பணியை ரூ. 3,00,000/– மதிப்பீட்டில் செய்வதற்கு 18–04–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | டெண்டர் விகிதம் (மதிப்பீட்டினை விட ) | |
|---|---|---|---|
| | | குறைவு | அதிகம் |
| 1. | திரு. சி. ஸ்டாலின் கஞ்சிக்குழி | –0.03% | – |
| 2. | திரு. ஜி. சுந்தர்ராஜ் நேசர்புரம், பள்ளியாடி. | – | 0.01% |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட/மதிப்பீட்டினை விட –0.03% குறைவான ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. சி. ஸ்டாலின் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 370/2018/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1271</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

27) இந்நகராட்சி கீழ்கண்ட பணியாளர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் பயணப்படி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண். | பணியாளர் பெயர் | பதவி | மாதம் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | எம். சக்திகுமார் | மேலாளர் | 02/2018 | 3070/– |
| 2. | எம். சக்திகுமார் | மேலாளர் | 03/2018 | 480/– |
| 3. | பி.ஆர்.பாபு | உதவி திட்ட அமைப்பாளர் | 10/2017 | 3325/– |
| 4. | பி.ஆர்.பாபு | உதவி திட்ட அமைப்பாளர் | 11/2017 | 3230/– |
| 5. | எஸ். சுதா | நகரமைப்பு ஆய்வாளர் | 12/2017 | 4230/– |
| 6. | எஸ். சுதா | நகரமைப்பு ஆய்வாளர் | 02/2018 | 2120/– |
| 7. | எஸ். சுதா | நகரமைப்பு ஆய்வாளர் | 03/2018 | 1230/– |

**<u>மன்றத் தீர்மானம் எண். 1272</u>**

அனுமதிக்கப்பட்டது.

28) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN 75பி-9346-க்கு தகுதி சான்று புதுப்பித்துக் கொள்வதற்கு புதிய வேக கட்டுப்பாட்டு கருவி பொருத்துவதற்கு வேண்டி 23–04–2018 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை<br>ரூ. |
|---|---|---|
| 1. | Panidan Vehicle,<br>Pollution Testing centre,<br>Kozhipoorvilai . | 8500/– |
| 2. | Arjun Vehicle<br>Pollution Testing centre<br>Marthandam | 8000/– |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண். 1 ஐ விட வ.எண். 2 Arjun Vehicle Pollution Testing centre, Marthandam நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது.

எனவே குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Arjun Vehicle Pollution Testing centre, Marthandam நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

(ந.க.எண்.1256/2013/அ2)

<u>மன்றத் தீர்மானம் எண். 1273</u>

அனுமதி வழங்கப்பட்டது.

29) திருநெல்வேலி மண்டலத்தில் உள்ள 20 நகராட்சிகளிலும் தெருவிளக்கு பராமரித்தலில் மின்சாரம் சேமிப்பது குறித்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைவான ஒப்பந்தப்புள்ளி (ரூ.84,74,050/– +GST) கொடுத்துள்ள M/s. Daraghaw & Company Private Ltd ., Bangalore நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்ட அறிக்கை தயார் செய்து செயல்படுத்த பத்மனாபபுரம் நகராட்சி பங்குத் தொகையாக ரூ.2,48,277/– (1545 x 16.697) செலுத்திடுமாறு இந்நகராட்சி மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண். 1406/2017/பி1, நாள் 04–05–2018 படி உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே பத்மனாபபுரம் நகராட்சிக்குரிய திட்ட அறிக்கை (DPR)தயார் செய்யப்பட்டு பெறப்பட்டுள்ளதால், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் உத்திரவுபடி இந்நகராட்சியின் பங்குத் தொகை ரூ.2,48,277/– செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 1406/2017/இ1)

<u>நகர் மன்றத் தீர்மான எண்.1274,</u>

அனுமதி வழங்கப்பட்டது.

ஒப்பம்/–
தனிஅலுவலர்,
பத்மனாபபுரம் நகராட்சி.

//உண்மை நகல் //

ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.